

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.6.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 5 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட 26 மாவட்டங்களில் உள்ள பூமாலை வணிக வளாகங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் மரு.தாரேஸ் அஹமது, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி ச.திவ்யதர்சினி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.06.2023) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில், விவசாய பெருமக்கள் தங்கள் நிலத்தில் உள்ள மண்வளத்தினை அறிந்து, அதற்கேற்ப உரமிடுவதை ஊக்குவிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள “தமிழ் மண்வளம் எனும் புதிய இணைய முகப்பினை” தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், உதயநிதி ஸ்டாலின், டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை உழவர் நலத்துறைச் செயலாளர் சி.சமயமூர்த்தி, வேளாண்மை உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் ஆர்.நந்தகோபால் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தந்தை பெரியாரையும் அவரது பகுத்தறிவுச் சிந்தனைகளையும்

# உலகமயமாக்கும் ஆசிரியர் கி.வீரமணியின் பணி தொடர வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜூன் 30-**

**திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களின் 90வது பிறந்தநாளை முன்னிட்டு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் தந்தை பெரியாரையும், அவரது பகுத்தறிவுச் சிந்தனைகளையும் உலகமயமாக்கும் ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் பணி தொடர வேண்டும் என வாழ்த்தியுள்ளார்.**

**‘90இல் 80 அவர்தான் வீரமணி’ தலைப்பில் சிறப்பு நிகழ்ச்சியில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தியை திருச்சி சிவா வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:

சுயமரியாதை என்று சொல்லப்படும் தன்மானத்துடன், ஒவ்வொரு மனிதரும் வாழ்வுரிமை பெற வேண்டும் என்பதே திராவிட இயக்கத்தின் இலட்சியம். தனி மனிதர்களுக்குத் தன்மானம் கிடைக்கப் பெற வேண்டும் என்றால், இயக்கத்தை வழிநடத்துபவர்களுக்குத் தன்மானத்தைவிட இனமானமே பெரிதாக இருக்கும். இருக்க வேண்டும்.

தன் மீது வீசப்படும் சொற்களையும், கற்களையும் எதிர்கொண்டு, எதிரிகளின் வசவுகளை உரமாக்கிக் கொண்டு, உயர்ந்து வளர்ந்து, பழமும், நிழலும் தரும் மரமாக நிலைத்து நிற்பதே திராவிட இயக்கத்திற்கான தலைமைப் பண்பு. அத்தகைய தலைமைப் பண்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்து, நீண்ட பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரராக இருப்பவர்தான் நம் மதிப்பிற்குரிய மானமிகு ஆசிரியர் அய்யா அவர்கள்.

### தன்னலமற்ற தொண்டு!

90 வயதில் 80 ஆண்டு பொது வாழ்வு என்கிற பெருமையைத் திராவிட இயக்கத்தில் அன்றி, வேறு எந்த இயக்கத்திலும் காண்பது அரிது! முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தனது 94 ஆண்டு கால வாழ்வில் 80 ஆண்டுகால பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரராகத் திகழ்ந்தவர். இனமானப் பேராசிரியர் அவர்கள் தனது 96 ஆண்டு கால வாழ்வில் ஏறத்தாழ அதே அளவிலான பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரர். இன்று நம் மதிப்பிற்குரிய மானமிகு ஆசிரியர் அய்யா அவர்களும் அத்தகைய பெருமைக்குச் சொந்தக்காரராகத் திகழ்கிறார்.

நூற்றாண்டு கடந்த திராவிட இயக்கத்தில் முக்கால் நூற்றாண்டைக் கடந்த பொது வாழ்வு என்பது நம் தலைவர்களுக்கு வாய்த்தது என்பது, நமக்குப் பெருமையாக மட்டுமல்ல, இந்தச் சமுதாயத்திற்குப் பெரும் பயனாகவும் அமைந்துள்ளது.

தன்னலமற்ற தொண்டறத்தால்தான் சமுதாயச் சீர்திருத்தத்தை உருவாக்க



முடியும் என்று தனது 95 வயது வரை ஓயாமல் பயணித்து, மக்களிடம் பரப்புரை மேற்கொண்டு, மிகப் பெரும் மாற்றத்தை, தான் வாழும் காலத்திலேயே நிகழ்த்திக் காட்டியவர் புரட்சியாளர் தந்தை பெரியார்.

தந்தை பெரியாரின் சிந்தனைகளை அவர் கண் முன்னாலேயே சட்ட வடிவமாக்கிக் காட்டியவர் பேரறிஞர் அண்ணா. தந்தை பெரியார் வாழ்ந்த காலத்திலும், பெரியாருக்குப் பிறகும் அவரது சிந்தனைகளைச் சட்டங்களாகத் திட்டங்களாகத் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

திராவிடர் கழகத்திற்கும் திராவிட முன்னேற்றத்திற்கும் பாதை சற்று மாறுபட்டாலும் இலக்கு ஒன்றுதான். இரு இயக்கங்களுமே சுயமரியாதை சமூக நீதி என்ற தண்டவாளங்களின் மீது வேகம் குறையாமல் ஓடுகின்ற இரயில்கள்.

10 வயதிலேயே, திராவிடர் கழக மேடை மீது போடப்பட்டிருந்த மேசை மீது ஏறி நின்று பகுத்தறிவை முழங்கிய மாணவரான ஆசிரியர் அய்யாவின் முழக்கம் இன்று வரை ஓயாமல் தொடர்கிறது. அது என்றும் தொடர வேண்டும் என்பதே என் விருப்பம். நம் விருப்பம்.

நமது இயக்கத்திலே, தந்தை பெரியாரிடம் இருந்து நற்சான்றை மட்டுமல்ல, அவரது முழுமையான நம்பிக்கையையும் பெற்றவர் ஆசிரியர் அய்யா அவர்கள். பெற்ற நம்பிக்கையை இன்றளவிலும் முழுமையாகக் காப்பாற்றி வருகிறார்.

### திராவிடர் கழகம் எனும் ஆலமரம்!

தந்தை பெரியார் உருவாக்கிய திராவிடர் கழகம் எனும் ஆலமரத்தை பாதுகாப்பதுடன் பல புதிய விழுதுகளையும் உருவாக்கி, இந்தக் கொள்கை ஆலமரம் என்றென்றும் நிலைத்திருக்கும் வகையில் தொண்டாற்றி வருபவர் நம் ஆசிரியர் அய்யா அவர்கள்.

பேரறிஞர் அண்ணா பொறுப்பு வகித்த, குத்தூசி குருசாமி போன்றவர்கள் பொறுப்பு வகித்த ‘விடுதலை’ நாளேட்டின் ஆசிரியராக 60 ஆண்டுகளைக் கடந்து பணியாற்றி வரும் ஆசிரியர் அய்யா அவர்களின் இந்தப் பெரும்பணி என்பது ஒரு பெரும் சாதனை!

தன்னிடம் தந்தை பெரியார் ஒப்படைத்த இயக்கத்தை, பத்திரிகையை, நிறுவனங்களை பன்மடங்கு பெருக்கி, பகுத்தறிவுப் பயணத்தைப் பழுதறத் தொடர்ந்து, தொண்டால் பொழுதளக்கும் மானமிகு ஆசிரியர் அவர்களுக்கு என் வாழ்த்துகளை மட்டுமல்ல, வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெருக்கடி நிலைக்கால ‘மிசா’ சிறை வாசத்தில் நான் சித்திரவதைகளை எதிர்கொண்ட போது, என் தோள் பற்றித் துணைநின்ற தோழமைத் தலைவர் நம் ஆசிரியர் அய்யா. அந்த நெருக்கடி நிலைக்காலத்தில் மட்டுமல்ல, எந்தவொரு நெருக்கடி என்றாலும் எனக்கு நல்லாசானாக, நட்புரிமையுடன் ஆலோசனைகள் வழங்கி வருபவர் தாய்க் கழகத்தின் தலைவரான ஆசிரியர் அய்யா அவர்கள்.

இன்று அறிவிக்கப்படாத நெருக்கடி நிலையை இந்திய ஒன்றியம் சந்தித்து வரும் நிலையில், வலிமையான ஒருங்கிணைப்புக்கும், முன்னெடுப்புகளுக்கும் மானமிகு ஆசிரியர் அய்யா அவர்களின் வழிகாட்டுதல் மிக மிக அவசியம்.

அரசியல் குறித்த ஆலோசனைகள் மட்டுமல்ல, வாழ்வியலுக்கான ஆலோசனைகளையும் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். 90 வயதிலும் இளைஞருக்குரிய வேகத்துடனும், சுறுசுறுப்புடனும் அவர் செயலாற்றுவதை வியப்புடன் பார்க்கிறேன்.

### பெரியார் உலகம்!

தாய்க் கழகமான திராவிடர் கழகத்தைக் கட்டிக்காத்து வரும் ஆசிரியர் அய்யா அவர்கள் தந்தை பெரியார் வாழ்ந்த காலத்தையும் தாண்டி, நூற்றாண்டு விழா கொண்டாடி, இன்னும் பலப்பல ஆண்டுகள் இதே சுறுசுறுப்புடனும் வேகத்துடனும் செயலாற்றி எங்களை வழிநடத்த வேண்டும்.

அவர் சிந்தனையில் உருவாகிச் செயல்வடிவம் பெற்று வரும் ‘பெரியார் உலகம்‘ முழுமை பெற்று அவர் தலைமையில் திறப்பு விழா காண வேண்டும். பெரியாரையும் அவரது பகுத்தறிவுச் சிந்தனைகளையும் உலகமயமாக்கும் அவரது பெரும்பணி தொடரவேண்டும் எனத் தெரிவித்து, நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளை உரித்தாக்குகிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### ஜூலை 1 முதல் 25 வரை - சென்னையில்

# மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நாளை தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஜூன் 30-

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னையில் 17 இடங்களில் ஜூலை 1 ஆம் தேதி முதல் ஜூலை மாதம் 25ந் தேதி வரை முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நாளை சென்னை, நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் தொடக்க விழா நடக்கிறது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் வீரர் வீராங்கனைகள் சென்னை வந்து போட்டிகளில் பங்கேற்க ஏதுவாக பேருந்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பேருந்துகளை சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்ததந்த மாவட்டங்களில் தொடங்கி வைக்க உள்ளார்கள்.

இந்த போட்டிகளில் பங்கேற்கவுள்ள 27,000க்கும் மேற்பட்ட வீரர் வீராங்கனைகள், பயிற்றுநர்கள், நடுவர்கள், அலுவலர்கள் மற்றும் தேசிய மாணவர் படை தன்னார்வலர்கள் அனைவருக்கும் போட்டி நடைபெறுகின்ற அனைத்து நாட்களிலும் தங்குவதற்கு வசதியாக சென்னையில் 2000க்கும் மேற்பட்ட அறைகள் மற்றும் மேலக் கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவ மாணவியர் விடுதிகளில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் போட்டி நடைபெறும் அனைத்து நாட்களிலும் உணவு மற்றும் சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. போட்டி நடைபெறும் இடங்களில் காவல்துறை பாதுகாப்பு, பேருந்து வசதிகள், மருத்துவம் மற்றும் ஆம்புலன்ஸ் வசதிகள் சிறந்த முறையில் மேற்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது.

போட்டிகளை சிறப்பாக நடத்திட ஏதுவாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக் கழகம், மாநகர போக்குவரத்து கழகம், பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத் துறை மற்றும் காவல் துறை ஆகிய துறைகளுடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

போட்டி நடைபெறும் நாட்கள் மற்றும் இடங்கள் பின்வருமாறு.



ஜூலை – 01 முதல் 25 –வரை – கபடி ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கம். நேரு பூங்கா விளையாட்டு வளாகம்.

ஜூலை – 01 முதல் 10 – வரை – சிலம்பம் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், மேலக்கோட்டையூர்.

ஜூலை – 01 முதல் 22 வரை – கைப்பந்து ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கம்.

ஜூலை – 03 முதல் 25 வரை – ஹாக்கி ராமச்சந்திரா பல்கலைக்கழகம்.

ஜூலை – 03 முதல் 09 – வரை – டென்னிஸ் டென்னிஸ் அரங்கம் நுங்கம்பாக்கம்.

ஜூலை – 04 முதல் 13 வரை – கிரிக்கெட் கிரிக்கெட் வளாகம், அசோக் நகர், மெரினா கடற்கரை, குருநானக் கல்லூரி, சென்னை பல்கலைக் கழகம், லயோலா கல்லூரி, எஸ்.ஆர்.எம். கல்லூரி, போரூர்.

ஜூலை – 05 முதல் 11 – வரை – பூப்பந்து தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், மேலக்கோட்டையூர்.

ஜூலை – 05 முதல் 12 – வரை – கூடைப்பந்து ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கம்.

ஜூலை – 07 முதல் 10 – வரை – நீச்சல் நீச்சல் குள வளாகம் –வேளச்சேரி.

ஜூலை – 05 முதல் 07 – வரை டேபிள் டென்னிஸ் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், மேலக்கோட்டையூர்.

ஜூலை – 09 முதல் 12 – வரை பளு தூக்குதல் ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கம்.

ஜூலை – 09 முதல் 11 – வரை கடற்கரை கைப்பந்து மெரினா கடற்கரை.

ஜூலை – 12 – சதுரங்கம் ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கம்.

ஜூலை – 12 முதல் 25 – வரை கால்பந்து ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம், ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கம். நேரு பூங்கா விளையாட்டு வளாகம்.

ஜூலை – 15 முதல் 19 – வரை – தடகளம் ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கம்.

ஜூலை – 13 முதல் 19 – வரை – மாற்றுத்திறனாளி தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் மேலக்கோட்டையூர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தோல் தொழிலாளர் நலவாரிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நெல்லிக்குப்பம் புகழேந்தி நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### கோட்டூர் வடக்கு ஒன்றியத்தில்

# தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா கொடிமேடை!

## 70அடி கம்பத்தில் பூண்டி கலைவாணன் கழகக் கொடி ஏற்றினார்!

திருவாரூர், ஜூன் 30-


திருவாரூர் மாவட்டம் கோட்டூர் வடக்கு ஒன்றியத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு கொடிமேடையில் அமைக்கப்பட்டுள்ள 70அடி பிரமாண்ட கொடிக் கம்பத்தில் மாவட்டச் செயலாளர் பூண்டி.கலைவாணன் எம்.எல்.ஏ., கழக கொடியை ஏற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். ஒன்றியச் செயலாளர் பாலஞானவேல், மாவட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் எம்.ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் நிகழ்வுக்கு முன்னிலை வகித்தனர்.

முத்தமிழ்அறிஞர்கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களோடு திருவாரூர் மாவட்டம் முழுவதும் ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக்கழக, வார்டு கழகங்களில் பல்வேறு சேவைத்திட்டங்கள் எழுச்சியோடு நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாக கோட்டூர் வடக்கு ஒன்றியத்தில் திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி பிரதான சாலையில் உள்ள மழவராயநல்லூர் ஊராட்சியில் உள்ள ரத்தினவேல் நகர் பகுதியில் கழகச் செயல்மறவர் யோகபாலன் ஏற்பாட்டில் சட்டவிதிகளுக்குட்பட்டு கலைஞர் நூற்றாண்டுவிழா சிறப்பு கொடிமேடையும், 70 அடி உயர கழக கொடிக்கம்பமும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு கொடிமேடையை மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமை ஏற்று கழகக் கொடியை ஏற்றிவைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். எம்.ராமகிருஷ்ணன், பாலஞானவேல் உள்ளிட்டோர் விழாவிற்கு முன்னிலை வகித்தனர். ரேணுகா வெங்கடாசலம் நன்றி தெரிவித்தார். கழக நிர்வாகிகளும், பொது மக்களும் விழாவில் பங்கேற்றனர்.



திருச்சிராப்பள்ளி மாவட்டம், தில்லைநகர், அரசு வணிக வளாகத்தில் புதிய சார் பதிவாளர் அலுவலகத்தினை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் நேற்று (29.06.2023) பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் இரா.வைத்திநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தர பாண்டியன், ஸ்டாலின் குமார், தியாகராஜன், எம்.பழனியாண்டி, துணைப் பதிவுத்துறை தலைவர் இராமசாமி, உதவி பதிவுத்துறை தலைவர் ராஜா, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் த.இராஜேந்திரன், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் நகரச் செயலாளர் இரா சக்கரை இல்லத் திருமண விழாவை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, திருமதி விசாலாட்சி பொன்முடி ஆகியோர் சுயமரியாதை திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினர். மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா. இலட்சுமணன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாநில விவசாய தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இராமமூர்த்தி, வி.சி.க. மாவட்டச் செயலாளர் ஆற்றலரசு, மாவட்டத் துணைச் செயலாளர்கள் டி. என். முருகன், தயா. இளந்திரையன், இரா. கற்பகம், நகர மன்றத் தலைவர் ச. தமிழ்ச்செல்வி பிரபு உள்ளிட்ட ஒன்றிய நகர பேரூர்க் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.